இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் போது அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான பகிரப்பட்ட அர்ப்பணிப்புக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது இச்சந்திப்பில் வலியுறுத்தப்பட்டது.


அரசர் மூன்றாம் சார்லஸ் உடன் திருத்தந்தை (@VATICAN MEDIA)

# அரசர் மூன்றாம் சார்லஸ் மற்றும் அரசி கமிலாவுடன் திருத்தந்தை

உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் போது அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான பகிரப்பட்ட அர்ப்பணிப்புக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது இச்சந்திப்பில் வலியுறுத்தப்பட்டது.

அக்டோபர் 23, வியாழன் காலை வத்திக்கான் திருத்தந்தை மாளிகையில் இங்கிலாந்து அரசர் மூன்றாம் சார்லஸ் மற்றும் அரசி கமிலா ஆகியோரை சந்தித்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

திருத்தந்தையுடனான தனிப்பட்ட சந்திப்பிற்குப் பின் திருப்பீடச் செயலர் கர்தினால் பியத்ரோ பரோலின் அவர்களையும் பன்னாட்டு உறவுகளுக்கான திருப்பீடத் துறையின் செயலர் பேராயர் பால் ரிச்சர்ட் கல்லாகரையும் சந்தித்தனர்.

அரச செயலகத்தில் நடந்த சுமுகமான பேச்சுவார்த்தைகளின்போது, இருதரப்பு உறவுகளுக்கு இடையே தற்போதுள்ள நல்ல தொடர்பிற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

அதன்பின், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வறுமைக்கு எதிரான போராட்டம் போன்ற பொதுவான ஆர்வமுள்ள விடயங்கள் விவாதிக்கப்பட்டன.

உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் போது அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான பகிரப்பட்ட அர்ப்பணிப்புக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது இச்சந்திப்பில் வலியுறுத்தப்பட்டது.

இறுதியாக, ஐக்கிய அரசில் உள்ள திருஅவையின் வரலாற்றை நினைவு கூர்ந்து, கிறிஸ்தவ உரையாடலைத் தொடர்ந்து ஊக்குவிப்பதன் அவசியம் குறித்தும் கருத்துக்கள் பகிரப்பட்டன.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# சென்னை மயிலை உயர் மறைமாவட்டம் – மாணாக்கர் இயக்க (YCS/YSM) தலைமைத்துவப் பயிற்சி

அக்டோபர் 18, 2025 அன்று, வேப்பேரியில் உள்ள புனித வசையப்பர் ஆங்கிலோ இந்தியன் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், சென்னை மயிலை உயர் மறைமாவட்டம் சார்ந்த YCS/YSM தலைமைத்துவப் பயிற்சி சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வு செபமும் வரவேற்புரையுடன் தொடங்கியது. பின்னர் கருத்தாளராக வந்திருந்த அருட்தந்தை வருண் ரிச்சர்ட் (புனித வசையப்பர் ஆலய உதவிப் பங்குத் தந்தை மற்றும் முன்னாள் YCS/YSM உறுப்பினர்) அறிமுகப்படுத்தப்பட்டார். மாணவர்கள் வழிகாட்டிகளுடன் குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர்; உள்ளூர் இளைஞர்கள் மற்றும் தன்னார்வலர்கள் நிகழ்வை சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

அருட்தந்தை வருண் அவர்கள் “தலைமைத்துவம் என்றால் என்ன?”, “உண்மையான தலைவர் யார்?” மற்றும் “ஒரு உண்மையான தலைவரின் குணங்கள்” என்ற தலைப்புகளில் ஊக்கமளிக்கும் உரையை வழங்கினார். தலைமைத்துவம் குறித்த வீதி நாடகம் அனைவரின் பாராட்டையும் பெற்றது.


இரண்டாவது அமர்வில் “YCS/YSM செயல்முறை மற்றும் செயல்பாட்டில் தலைமைத்துவம்” குறித்து பேசிய அருட்தந்தை வருண், “சிறிய செயல்களே பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்” என்பதை வலியுறுத்தினார். இதனைத் தொடர்ந்து திருமதி பிரின்சஸ் பியூலா (முன்னாள் வழிகாட்டி) மற்றும் செல்வி மோனெட் ரெனி (தேசியச் செயலாளர்) தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து பங்கேற்பாளர்களை ஊக்குவித்தனர்.

சகோதரர் தீபக் தலைமையில், அருட்தந்தை வருண் ரிச்சர்ட், வழிகாட்டிகள் திருமதி பெனிஷா, திருமதி கிரேஸ் பால், மற்றும் இளைஞர் தன்னார்வலர்கள் இணைந்து நிகழ்வை சிறப்பாக ஏற்பாடு செய்தனர்.

மொத்தம் 21 பள்ளிகளில் இருந்து 185 மாணவர்கள் மற்றும் 29 வழிகாட்டிகள் பங்கேற்றனர். நிறைவாக விருந்தினர்களை கௌரவித்து, புனித வசையப்பர் பள்ளி தாளாளர் அருட்தந்தை பீட்டர் ஜெரால்ட் மற்றும் அனைத்து ஒத்துழைப்பாளர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

உற்சாகமான YCS/YSM கைத்தட்டலுடன் நிகழ்வு நிறைவடைந்து, பங்கேற்பாளர்கள் விசுவாசத்துடனும் சேவை மனப்பான்மையுடனும் தலைமை ஏற்க உறுதியுற்றனர்.

# சிக்னிஸ் ஆசியா 2025 பொதுக்கூட்டம் மனிலாவில் தொடங்கியது: “நம்பிக்கையின் நிசப்தங்கள்” உலகிற்கு அமைதியின் செய்தி




கத்தோலிக்க ஊடக வல்லுநர்களின் கண்டமட்டச் சந்திப்பான சிக்னிஸ் ஆசியா வருடாந்திர பொதுக்கூட்டம் 2025, அக்டோபர் 21 அன்று மனிலாவில் உள்ள அமலோற்பவ அன்னை பேராலயத்தில் திருப்பலியுடன் தொடங்கியது.

“நம்பிக்கையின் நிசப்தங்கள்: அமைதியைப் பகிர்ந்து, எதிர்காலத்தை கட்டமைத்தல்” என்ற கருப்பொருளில் நடைபெற்ற தொடக்கத் திருப்பலியை மனிலா மறைமாவட்டச் செயலாளர் அருட்தந்தை கார்மேலோ ஜெக் அரடா நடத்தினார்.

தமது உரையில் அவர், “சத்தமும் சச்சரவுமாகிய உலகில், ஊடகப் பணியாளர்கள் நம்பிக்கையின் நிசப்தங்களை வெளிப்படுத்த அழைக்கப்படுகிறார்கள்” என்று வலியுறுத்தினார். செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் ஊடகங்களால் வடிவமைக்கப்படும் இக்காலத்தில், ஊடகம் இரக்கத்தையும் அமைதியையும் பரப்பும் கருவியாக இருக்க வேண்டும் என அவர் கூறினார்.

ஆசியாவின் இந்தியா, வியட்நாம், இந்தோனேசியா, மலேசியா, திமோர்-லெஸ்தே, தென் கொரியா, கம்போடியா, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளில் இருந்து வந்த சுமார் 70 பிரதிநிதிகளும் — அதில் 25 க்கும் மேற்பட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் ஊடக நிபுணர்களும் — கலந்து கொண்டனர்.

இந்தியாவைச் சேர்ந்த சிக்னிஸ் ஆசியா தலைவர் அருட்தந்தை ஸ்டான்லி, அருட்தந்தை அரடாவிற்கு நன்றியைத் தெரிவித்தார்.

இக்கூட்டம் தகவல் தொடர்பு மூலம் அமைதி, சமூக முன்னேற்றம், மற்றும் நம்பிக்கையை வளர்த்தெடுக்கும் தேவாலயத்தின் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. நான்கு முக்கிய தூண்கள் இதனை வழிநடத்துகின்றன:

1. அமைதிக்கான பாலமாக தகவல் தொடர்பு
2. மென்மையால் மாற்றத்தை உருவாக்குதல்
3. சமூக முன்னேற்றத்திற்கான ஊடகம்
4. நம்பிக்கை செயல்பாட்டில்

கூட்டத்தின் சின்னமான இரு இறகுகளால் இதயம் உருவாக்கும் புறா — அமைதி, அன்பு, மற்றும் தகவல் தொடர்பின் மாற்றுத் திறனை குறிக்கிறது. “சத்தத்தால் அல்ல, கருணையாலும் உண்மையாலும் நம்பிக்கையைப் பகிர்வோம்” என்ற செய்தி, இக்கூட்டத்தின் மையமாகத் திகழ்கிறது.

# பினாங்கு மறைமாவட்டத்தின் அருளாளர் வாழ்வு பவள விழா

பினாங்கு: பினாங்கு மறைமாவட்டம், அருளாளர் வாழ்வு இரட்டைப் பவள விழாவை (Jubilee of Consecrated Life) அக்டோபர் 11 அன்று உயிர்த்த கிறிஸ்து தேவாலயத்தில் நன்றிகூறும் திருப்பலியுடன் கொண்டாடியது. இந்த விழா, கிறிஸ்துவின் அன்பை இவ்வுலகில் காணும்படி தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த ஆண்களையும் பெண்களையும் கௌரவித்தது.

பினாங்கு மறைமாவட்ட அருளாளர் சங்கம் (Association of Religious of Penang Diocese) ஏற்பாடு செய்த இந்த விழாவில், மறைமாவட்டத்தில் பணியாற்றும் 15 சபைகளைச் சேர்ந்த 26 அருளாளர்கள் கலந்துக்கொண்டனர். ஐந்து குருக்கள் இந்தத் திருப்பலியை இணைந்து நிறைவேற்றினர்: அவர்களில் துறவரர் எஸ்மாண்ட் சுவா (OFM), அருட்பணி ஜோ ஸ்டீபன் (CSsR), அருட்பணி பேட்ரிக் மசாங் (CSsR), அருட்பணி ஜேம்ஸ் டான் (SJ), மற்றும் கும்மேத்னரன் கிறிஸ்பஸ் மோசினோ (OFM) ஆகியோர் ஆவர்.

திருப்பலியின் தொடக்கத்தில், அருளாளர்கள் பலிபீடத்தின் முன் தூபம் காட்டினர். இது, சங்கீதம் 141-ல் கூறப்பட்டிருப்பது போல, “என் ஜெபம் தூபம்போல உம் சமூகத்தில் ஏறக்கடவது” என்பதன் அடையாளமாகவும், அருளாளர் வாழ்வுக்கான தங்கள் புதிய அர்ப்பணத்தையும் குறித்தது.

பிலிப்பியர் 2:1-4 மற்றும் மாற்கு 3:31-35 ஆகிய திருவழிபாட்டு வாசகங்கள் கிறிஸ்தவ சீடத்துவத்தின் சாராம்சத்தை எடுத்துரைத்தன. முக்கியப் பிரசங்கியாளரான துறவரர் எஸ்மாண்ட் சுவா, அருளாளர் வாழ்வின் இதயமான பணிவு, ஊழியம் மற்றும் உறவுமுறை (humility, service, and communion) பற்றிப் பேசினார்.

“அருளாளர், குடும்பம் அல்லது பங்குத்தள வாழ்க்கை என ஒவ்வொரு கிறிஸ்தவ அழைப்பின் அடித்தளமும், மற்றவர்களை நமக்கு முன்னதாக வைப்பதும், பணிவான அன்பில் உறவை வளர்ப்பதும்தான்,” என்று அவர் கூறினார். “அருளாளர் வாழ்வு என்பது இயேசுவின் வாழ்வு முறையின் ஒரு உயிருள்ள நினைவூட்டலாகும், இது அவருடைய தாழ்மை, மகிழ்ச்சி மற்றும் அன்பைப் பிரதிபலிக்கிறது.”

இன்றைய அருளாளர் சமூகங்கள் எதிர்கொள்ளும் எண்ணிக்கை குறைவு மற்றும் வளர்ந்து வரும் மனக்கலக்கம் போன்ற சவால்களை துறவரர் எஸ்மாண்ட் சுவா ஒப்புக்கொண்டார். அவர் அருளாளர்களை, உலகியல் கவலையைவிட இறைவனுக்கான புனிதமான ஏக்கம் ("restlessness for heaven") கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். இதை, இறைவனுடன் இணைந்திருப்பதன் மூலமும் ஆண்டவரில் மகிழ்ச்சியடைவதன் மூலமும் வாழலாம் என்று அவர் கூறினார்.

மேலும், அருளாளர் வாழ்வு இறை ஊழியர்களுடன் (laity) ஆழமாகப் பிணைந்துள்ளது என்றும், இருவரும் கிறிஸ்துவை உலகிற்கு வெளிப்படுத்தும் பணியைப் பகிர்ந்துகொள்கிறார்கள் என்றும் அவர் நினைவுபடுத்தினார். "இறைஊழியர்களின் ஜெபம், நட்பு மற்றும் விசுவாசம் மூலம் அருளாளர்களுக்கு ஆதரவளிக்கலாம், மேலும் அவர்களும் இதுபோன்ற அழைப்பைப் பற்றி ஆராயத் தயாராக இருக்க வேண்டும்," என்றும் அவர் கூறினார்.

பினாங்கு மறைமாவட்ட அருளாளர் சங்கத்தின் தலைவரான





துறவரர் கிறிஸ்பஸ் மோசினோ, விழாவுக்கு ஏற்பாடு செய்த துறவரர் எஸ்மாண்டுக்கும், விழாவை அர்த்தமுள்ளதாக்க உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்தார்.

பினாங்கு மறைமாவட்டத்தின் ஆயராகிய கர்தினால் செபாஸ்டின் பிரான்சிஸ் அவர்களின் காணொளிச் செய்தி விழாவின்போது திரையிடப்பட்டது. தனது செய்தியில், கர்தினால் அருளாளர்களுக்கு நன்றி தெரிவித்ததுடன், வறுமை, பிரம்மச்சரியம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகிய நற்செய்தி வாக்குறுதிகளை “எளிமை, அழகு மற்றும் முழுமையின் பரிசுகளாக” இன்னும் ஆழமாகப் பாராட்டும்படி அவர்களை ஊக்குவித்தார்.

கலந்துகொண்ட ஒவ்வொருவருக்கும் போப் இரண்டாம் ஜான் பால் அவர்களின் Vita Consecrata (1996) நூலில் இருந்து "திரித்துவரிடம் மன்றாட்டு" (Prayer to the Holy Trinity) அடங்கிய ஜெப அட்டை வழங்கப்பட்டது. இது அருளாளர் வாழ்வுக்காக மன்றாட அழைப்பு விடுத்தது.

55 வருடங்களாக இறைவனுக்குச் சேவை செய்து வரும் சகோதரி சிரில்லா, FMDM, “இந்த நன்றிகூறும் திருப்பலியில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், மேலும் இறைவனின் அருட்கொடைக்காக அவருக்கு மகிழ்ச்சியான நன்றியை உணர்கிறேன்,” என்று கூறினார். ஸ்டெப்பனி ச்யோங்.

# கெடங்சா பாத்திமா அன்னை பெருவிழா





கெடங்சா, உலு சிலாங்கூர்: பாத்திமா அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட புனித மேரி சிற்றாலயத்தில், நம்பிக்கையும் ஐக்கிய உணர்வுடனும் பங்கு மக்களும் திருப்பயணிகளும் அக்டோபர் 11 திகதியன்று அதன் ஆண்டு பெருவிழாவைக் கொண்டாட ஒன்றுகூடினர்.இந்த எளிமையான 60 ஆண்டு பழமையான சிற்றாலயத்திக்கு, அருகிலுள்ள தஞ்சோங் மாலிம், பேராக் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து வந்த பார்வையாளர்கள் உட்பட சுமார் 200 விசுவாசிகள் வருகை தந்தனர். விழா, மாலை 5:30 மணிக்கு பெருநாள் திருப்பலியுடன் தொடங்கியது. அதற்கு முன்னர் செபமாலை, நம்பிக்கையின் மன்றாட்டு மற்றும் ஜூப்ளி மற்றும் திருப்பயணிகளின் நன்றி மன்றாட்டுகள் நடைபெற்றன. இந்தத் திருப்பலியை சிற்றாலய நிர்வாகியான அருட்பணியாளர் வின்செண்ட் பால் தலைமை தாங்கி நடத்தினார்.

அருட்பணியாளர் வின்செண்ட், அனைவரையும் புனித நீரால் ஆசீர்வதித்து, 1917 அக்டோபரில் போர்த்துகலில் நடந்த பாத்திமா அன்னையின் கடைசித் தோற்றத்தை நினைவுகூர அனைவரையும் வரவேற்றார்.

தமது மறையுரையில், அருட்பணியாளர் வின்செண்ட், பாத்திமாவில் மூன்று மேய்ப்புக் குழந்தைகளுக்கு நடந்த மறைத் தோற்றங்களின் கதையை விவரித்தார். மேலும், அருள் நிறைந்த கன்னி மரியாவே தனது கடைசித் தோற்றத்தின்போது தன்னை “ஜெபமாலையின் அன்னை” (Lady of the Rosary) என்று அடையாளப்படுத்தினார் என்பதை விசுவாசிகளுக்கு நினைவுபடுத்தினார்.

“அன்னை மரியாள் அந்த குழந்தைகளுக்கு தன்னுடைய அர்பணிப்புக்காக ஓர் ஆலயம் எழுப்புமாறு கூறினார். அந்தச் சிறிய ஆலயம், பாத்திமா அன்னையின் மாபெரும் திருத்தலமாக மாறியது. இங்கேயும், நாம் புனித அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு சிற்றாலயத்தில் நிற்கிறோம். ஒருவேளை நமக்குத் தேவையானது ஒரு பெரிய கட்டிடம் அல்ல, மாறாக பெரிய விசுவாசத்தின் அடையாளம்,” என்று அவர் கூறினார்.

அருட்பணியாளர் வின்செண்ட், பங்கு மக்களை தினமும் செபமாலையை செபிக்க வலியுறுத்தினார். அது உள் அமைதிக்கும் ஆன்மீக வளர்ச்சிக்கும் வழி என்று கூறினார். “பாத்திமாவின் செய்தி உலகிற்கு மட்டுமல்ல, நம்முடைய சொந்த வாழ்க்கை, குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் பணியிடங்களுக்கும் கூட சமாதானத்தைக் கொண்டுவருவதே,” என்று கூறிய அவர், மற்றவர்களைப் புண்படுத்தும் மற்றும் கடவுளை அவமதிக்கும் கவனக்குறைவான வார்த்தைகள் மற்றும் மனப்பான்மைகளை தவிர்க்குமாறு எச்சரித்தார். இதனிடையே அருட்பணியாளர் வின்சன் அவர்களின் 27வது குருத்துவ ஆண்டு நினைவையொட்டி கேக் வெட்டப்பட்டது. புனித மேரி சிற்றாலயம், கடந்த 2023-லிருந்து, தஞ்சோங் மாலிம், புனித மீட்பர் தேவாலயத்தின் பராமரிப்பில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஆண்டின் பொதுக்காலம் 31ஆம் ஞாயிறு

## இறந்த ஆன்மாக்களை நினைகூறும் நாள்

**எசா 25 :6-9, உரோ 5:5-11, லூ 7: 1-17**

தாய்த்திரு அவை, நேற்று புனிதர் அனைவரின் பெருவிழாவையும், இன்று இறந்த நம்பிக்கையாளர் அனைவர் நினைவுநாளையும் கொண்டாடுகிறது.

மறைசாட்சியத்தால் சாட்சிய வாழ்வு வாழ்ந்தவர்கள், தூய வாழ்க்கை மேற்கொண்டவர்கள், இறைவனின் விருப்பத்தின்படி வாழ்ந்து, இறைவனுக்கு உகந்தவர்களாக முன்மாதிரிகையாக வாழ்ந்தவர்கள் அனைவரும் புனிதர்களே என திருஅவை போதிக்கிறது. எனவேதான் ‘புனிதர்களின் உறவு ஒன்றிப்பை நம்புகிறேன்’ என நம்புக்கை அறிக்கையில் ஒவ்வொரு திருப்பலியிலும் சொல்லிவருகிறோம்.

நற்செய்தியில் இயேசு சென்ற இடமெல்லாம் தான் சந்தித்த மக்களைக் கருணையுடன் பார்க்கின்றார். அதுவும் குறிப்பாக ஏழைகள், விதவைகள், ஒடுக்கப்பட்டோர் என தேவைப்படுவோரைத் தேடிச் செல்கிறார். இதன் விளைவாகவே புதுமைகளும் நடைப்பெற்றன.

இதன் அடைப்படையில் வைத்து பார்க்கின்றபோது, இன்றைய நற்செய்தியில் நயீன் என்னும் ஊரிலே இறந்துபோன இளைஞனை தூக்கி வருகின்றனர். அவனின் தாயோ கணவனை இழந்த விதவை. ஒரே மகன்.

அவர்கள் மீது பரிவு கொண்டு “அழாதீர்” என கருசணையோடு அவ்விளைஞனை தொடுகிறார். அவனும் உயிர்பெறுகிறான்.

இச்சம்பவத்தை, பலகூறுகளில் நாம் கண்ணோட்டமிடுவோம்.

1. கைம்பெண்ணிற்கு இரக்கம் கிடைக்கின்றது.
2. சமூகத்தில் மதிப்பிழந்த ஒருவருக்கு கைம்மாறு கிடைக்கின்றது.
3. தேவையில் தவிப்போருக்கு தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.
4. ஏழ்மை, தனிமை, நோய், போன்ற சூழலில் இரக்கம் கொள்வது.
5. உயிருள்ள வார்த்தை ஒருவருக்கு ஆற்றலும் ஊக்கமும் தருகிறது.

இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் கடவுள் நம்மை தேடி வருகின்றார் எனும் பாடத்தைக் கற்றுக்கொள்கிறோம். அத்தோடு இறைவனும் நம்மை கைவிடப்போவதில்லை எனும் உறுதியான மன திடத்துடன் செய்லபட ஊக்கம் கொடுக்கின்றது.

எனவே நம்மை தேற்றுவதற்காக மட்டும் அல்ல இறைவனோடு நெருக்கமான உறவையும் இவ்வாறான புதுமைகள் நமக்கு கற்பிக்கின்றன.

ஆகவே இன்று திருஅவை நினைவுக்கூறும் இறந்த விசுவாசிகள் அனைவரின் நினைவுநாளில் புனித நிலைக்குத் தேவையான அருளின் குறைவாலும், சின்னஞ்சிறு பாவங்களினாலும் விளைந்த விளைவுகளாலும் விண்ணகப் பேரின்பத்துக்கு செல்ல முடியாமல் உத்தரிப்பு நிலையில் இருக்கும் ஆன்மாக்களை நினைகூர்ந்து மன்றாடுவோம். அவர்களின் ஆத்ம இளைப்பாற்றிற்காக செபித்திடுவோம்.

நம் அன்பானவர்களின் கல்லறையில் மலர், மெழுகுதிரி, போன்றவை செலுத்தி அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி அவர்களுக்காக குடும்பம் குடும்பமாக நம்பிக்கையோடு மன்றாடுவோம். அவர்களை ஒருநாள் இறை ஆட்சியில் நாம் முகம்முகமாய் காண்போம் விசுவாசத்தோடு.

ஆ.வி.டேவிட். குளுவாங்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.